# தமிழர் தம் வணிக மேலாண்மைச் செய்திகள்

**முனைவர் சி. ஆரோக்கிய தனராஜ்**
**உதவிப் பேராசிரியர்,தமிழாய்வுத்துறை,**
**தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,**
**திருச்சிராப்பள்ளி – 620 002,**
**தமிழ் நாடு, இந்தியா.**

21

**ஆய்வுச் சுருக்கம்:**

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தோடு வாளொடு முன் தோன்றிய மூத்தக் குடி தமிழ் குடி" என்பார் ஐயனாரிதனார். தமிழர்கள் தொடாத துறைகளே இல்லையெனலாம். இவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கீழைமேலை நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டு தனக்கென தனி விதிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டவர்கள். இதன் அடிப்படையில் ஒருபொருளை உற்பத்தி செய்கின்ற முறைகளையும், அப்பொருளை மற்றவர்களிடம் கொடுத்து வேறொரு பொருளை வாங்கும் முறையானப் பண்டமாற்று முறைகளையும், ஒரு பொருளுக்கு ஈடாக காசு வாங்கும் முறைகளையும், ஓரிடத்தில் கிடைக்காத பொருளைப் பல இடங்களிலிருந்து பெற்றும் பிற மக்களுக்கு உதவும் மாட்சிமை பெற்றவர்களாகவும் இருந்துள்ளனர். இத்தோடு மட்டுமல்லாமல் உற்பத்தி செய்த பொருளை விற்பனை செய்கின்ற முறையில் விளம்பரப்படுத்தும் நோக்கம் கொண்டவர்களாகவும், பிற நாட்டுடன் தொடர்பு கொண்ட முறையினை இயற்கை சூழல்களுக்கு ஏற்ப தன்னுடைய கடல் வணிகத்தை எவ்வாறு ஏற்படுத்திக் கொண்டார்கள் என்பதையும், வணிகத்தில் எவ்வகையான **நிர்வாக மேலாண்மைச்** (Management) சிந்தனைகள் மற்றும் அதனை **நிர்வகிக்கும்** (Administration) தன்மைகள் எவ்வாறு கடைப்பிடிக்கப்பட்டன போன்ற செய்திகளையும் இக்கட்டுரையில் காண்போம்.

**திறவுச் சொற்கள்:**

நிர்வாகம்; மேலாண்மை ; அங்காடி-கடை ; பகர்ந்து வீசும்-இலாபம் ; கூழ்-பலவிதமான தானியங்கள்; பகர்ந்து வீசும்-இலாபம்; நாளங்காடி-பகல்நேரக்கடை; அல்லாங்காடி-இரவுநேரக்கடை; உல்கு-சுங்கவரி;

## முன்னுரை:

**"திரை கடலோடியும் திரவியம் தேடு"** என்ற ஔவையாரின் வாக்கிற்கிணங்க செல்வத்தை எவ்வாறு சேர்க்கவேண்டும். சேர்த்தச் செல்வத்தை எவ்வாறு காத்தல்

வேண்டும். காத்த செல்வத்தை எவ்வாறு செலவழிக்கவேண்டும் என்று கூறிய திருவள்ளுவரின் வணிகச் சித்தாந்தத்தை பழந்தமிழர் கையாண்ட முறையை இக்கட்டுரை வெளிப்படுத்தும் நோக்கம் கொண்டதாக அமைகிறது.

**வணிக மேலாண்மை விளக்கம்:**

"வணிக மேலாண்மை (Business Management) என்பது ஒரு நிறுவனத்தின் இலக்குகளை அடைய அதன் செயல்பாடுகளைத் திட்டமிடுதல், ஒருங்கமைத்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகும். இதில் நிதி சந்தைப்படுத்தல், மனித வளம் போன்ற பல்துறை அடங்கும்."

**வணிகர்களின் மேம்பாட்டில் மேலாண்மைச் சிந்தனைகள்:**

**"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு"** (திருக்குறள் எண் – 731)

திருவள்ளுவர் வணிகரைத் "தாழ்விலாச் செல்வர்" எனக் குறிப்பிட்டுள்ளார். வணிக வளம் நிறந்த நாடுகள் செல்வ வளத்திலும் முனைந்து நிற்கும். வணிக மேம்பாடு மிக்க உயர்ந்த குடிமக்களுக்கு நாட்டிலும் வீட்டிலும் நன்மதிப்பு கிடைக்கும் என்றார். இப்படிப்பட்டவர்கள் அரசர்களுக்கு அடுத்த நிலையில் வைக்கப்பட்டுள்ளமையைத் தொல்காப்பியர். அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற வரிசையில் மூன்றாம் நிலையாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் செல்வ மேம்பாட்டினை விளக்கும் காப்பியங்கள் சிற்றிலக்கியங்கள் யாவும் வணிகர் வீதிகளைச் சித்திரிக்க தவறுவதில்லை. தமிழ் இலக்கியங்களும் நாடகங்களும் வணிகரைத் கதைத் தலைவராக உருவகித்துப் பாடுவது வழக்கம். 32 வகை அணிகளில் **"பரிவர்த்தனை"** என்பது ஒருவகையான வர்த்தக அணியாகும். சங்க காலத்து இலக்கியங்கள் அறுவகை பிரிவில் கூட வணிகத்திற்கான **"பொருள்வயின் பிரிவையே"** பல இடங்களில் படம் பிடித்துக் காட்டுகின்றன.

**"மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவும்**
**பல்வேறு திருமணி முத்தமொடு**
**பொன்கொண்டு**
**சிறந்த தேயத்துப் பண்ணயம் பகர் நரும்"** (மதுரைக்காஞ்சி – 503-506)

மதுரைக்காஞ்சியில் மாங்குடி மருதனார் வணிகர்தம் மேம்பாட்டை பாராட்டுவார். மேலும், பெருநில வேந்தர்களின் பெருஞ்செல்வங்களையும் விலை தந்து வாங்கும் மாசாத்துவான், மாநாய்கன் போன்ற பெருங்குடி வணிகர்களும் அன்றைய நாள்களில் பூம்புகார்நகரில் வாழ்ந்தனர். பாண்டியனிடம் கண்ணகி வழக்காடுகின்ற வேளையில்,

**"ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி**

**மாசத்து வணிகன் மகனையாகி"**

(சிலப்பதிகாரம்–வழக்குரை காதை- 50-51)

என வணிகர்களின் குல மேம்பாட்டை இளங்கோவடிகள் வெளிப்படுத்தும் திறம் பாராட்டதக்கது.

**வணிகர்தம் மேலாண்மைச் சிந்தனைகள்:**

**"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**

**பிறவும் தம்போற் செயின்"** (திருக்குறள் – எண் – 160)

என்பது வணிகர் தம் மேலான எண்ணமாகும் என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிட்டுள்ளமை சிந்திக்கத்தக்கது. இதனையே பட்டினப்பாலையை இயற்றிய கடியலூர் உருந்திரங்கண்ணனார் வணிகர்களின் மேன்மை பற்றி குறிப்பிடும்போது,

**"நடுநின்ற நன்னெஞ்சினோர்**
**வடுவஞ்சி வாய் மொழிந்து**
**தமவும் பிறவும் ஒப்ப நாடி**
**கொள்வதூஉம் மிகை கொளாது**
**கொடுப்பதூஉம் குறை கொடாது**
**பல்பண்டம் பகர்ந்து வீசும்**

**தொல் கொண்டித் துவன் றிருக்கை"** (பட்டினப்பாலை–206-212)

என்ற அடிகளில் "பகர்ந்து வீசும்" என்ற சொற்றொடர் "இலாபம்" இன்னதென வெளிப்படையாகக் கூறிவிற்றல் என அறிஞர் உ.வே.சா உரைஎழுதியுள்ளமை வணிகர் தம் மேன்மை தெளிவாகப் புலப்படுகிறது.

மேற்கண்ட முறையில் வணிகர்கள் பேச்சுக் கலையில் வல்லவர். தம்பொருட்களை பல கோணங்களில் மதிப்பிட்டு, உரக்கக் கூவிப் பிறரை வாங்க வைக்கும் ஆற்றல் இவ்வணிகர்களுக்குண்டு என்பது வெளிப்படையாகும். அன்றியும் இவர்கள் பல மொழிகளை அறிந்திருந்தனர் என்பதை, சாதுவன் என்ற வணிகன் சென்ற மரக்கலம் நாகர் தீவிற்கு அருகில் தரைப்பட்டது. நாகர்தலைவன் சாதுவனைக் கொல்ல முற்பட்ட வேளையில் சாதுவன் நாகர் மொழியில் பேசி உயிர் தப்பியதுடன் நாகர் தலைவனையும் புத்தமத்தில்சேர்த்தாக மணிமேகலை கூறுகின்றது.

**வகைமை நோக்கில் வணிகர்களின் வகைகள்:**

வணிகரை இப்பர், கவிப்பர், பெருங்குடி வணிகர் என மூன்றாகப் பகுப்பர். வணிகர்களின் தம் வகையினை மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்கள் எடுத்தியம்புகின்றன.

கூல வணிகர், அறுவை வணிகர், பொன் வணிகர், முத்து வணிகர், பவள வணிகர், படைக்கல வணிகர், பிட்டு வணிகர், அப்ப வணிகர், வெற்றிலை வணிகர், புவணர், வாசனைப்பொருள் வணிகர் எனப் பலவாறாகப் பிரிக்கலாம். மணிமேகலை பாடிய சீத்தலைச் சாத்தனார் "கூல வணிகர்" என்னும் அடைமொழியுடன் அழைக்கப்படுகின்றார்.

## கடைத் தெருக்கள் அமைப்பில் மேலாண்மைச் சிந்தனைகள்:

மதுரைக் கடைத் தெருக்களில் எவ்வகையான பொருள்கள் (பண்டங்கள்) தென்பட்டன என்பதையும் வணிகர்கள் தேவைக்கேற்ப புதுப்பொருள்களைக் கண்டு பிடித்து விற்கும் மனநிலை அதவது இன்றைய சூழலுக்கேற்ப சந்தையில் புதிய பொருள்கள் நுகர்வுக்கு அறிமுகமாவதைப் போல கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலும் அறிமுகமானதை **சிலப்பதிகாரம்**குறிப்பிடுகிறது என்பதை,

**"வம்பின் முடிநவும் மாலையிற் புனைநவும்**
**வேதினத் துப்பவும் கோடுகடை தொழிலவும்**
**புகையவும் சாந்தவும்பூவிற் புனைநவும்**

**…………………..**

**அரசு விழை திருவின் அங்காடி விதியும்"**

(சிலப்பதிகாரம்- காடுகாண் காதை -175-179)

மேற்கண்ட வரிகளின் வாயிலாக வணிகர்களின் தன்மையில் இருந்து விற்பாரும், திரிந்து விற்பாருமுண்டு. இன்றைய நாள்களில், வணிகம் பெருக எத்தனையோ சமூக ஊடகங்கள் பெருவிட்டன. அக்காலக்கட்டத்தில் இன்னபொருள்கள் இன்ன கடையில் கிடைக்கும் என்பதை உணர்த்த வண்ணக் கொடிகள் பயன்படுத்தப்பட்டன. கடைகளை பகல்நேரக்கடை, இரவுநேரக்கடை என இரண்டாகப் பிரித்தனர். இதனை நாளங்காடி அல்லாங்காடி என்றும், பகற்காலத்தில் கொடிகளும் இரவுக் காலத்தில் விளக்குகளும் அடையாளம் காட்டின. நாளங்காடியிலும் அல்லங்காடியிலும் விலை கொள்ளுகின்றவரின் தம் ஓசையும் விலைகொடுக்கின்றவர் ஓசையும் ஒலித்துக்கொண்டிருக்கும் தன்மையை வைத்து **"அந்தயங்காடியின் சந்தங்காட்டி"** என பறவைகள் குழு குழுவாக எழுப்பும் ஒலியை மனோன்மணீயம் நாடகம் சித்திரிக்கின்ற தன்மை சிந்திக்கத்தக்கது.

## பொருள் உற்பத்தி மற்றும் வணிகம் வளர்ச்சியல் மேலாண்மைச் சிந்தனைகள்:

ஆற்றுப்படை இலக்கியங்களில் ஒன்றான கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில் ஆயர்குலப் பெண் தன் குடும்பப் பொருளாதாரத்தைப் பேணி சேமிப்பைக் கொண்டு கன்றுகள் வாங்கி தமது வணிகத்தை வளர்த்துக் கொண்ட

முறையை,

**"சிறுகுழை துயல்வரும் காதின் பனைதோள்**
**குறுநெறி கொண்டகூந்தல் ஆய்மகள்**
**அளைவிலை உணவின் கிளை உடன் அருத்தி**
**நெய்விலை கட்டி பசும்பொன் கொள்ளாள்**
**எருமைநல் ஆன் கரு நாகு பெறுஉம்"**

(பெரும்பாணாற்றுப்படை-161-165)

மோர் விற்று வருவாய் கொண்டு குடும்பம் நடத்தும் ஆயர்குலப்பெண். வெண்ணெய், நெய் ஆகியவை விற்றுவரும் பணத்தைக் கொண்டு பொன் வாங்காமல், எருமைக் கன்றுகளும் பசுக்கன்றுளும் வாங்கி தனது குடும்ப வளர்ச்சியில் ஈடுப்பட்டமை மேலாண்மைச் சிந்தனைகள் சொல்லாமல் விளங்குகின்றன.

**உற்பத்தி முறையிலும் பண்டமாற்று முறையிலும் மேலாண்மைச் சிந்தனைகள்:**

வேளாண்மையில் இருந்து உருவான முக்கிய வேலைப் பிரிவினையான கைத்தொழிலும் வாணிபமும் அவற்றின் வளர்ச்சிப் போக்கில் குறிப்பிட்ட பொருள்களை உற்பத்தி செய்பவர்களாகக்கைத்தொழிலாளர்கள் விளங்கினர்.

சேகரிக்கப்பட் இயற்கைப் பொருள்களையும் வேளாண் உற்பத்திப் பொருட்களையும் கைத்தொழில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களையும் மக்களிடம் (நுகர்வோரிடம்) கொண்டு சேர்ப்பவர்களாகவும் வணிகர்கள் இருந்தனர். இவர்களின் செயல்பாடுகள் வலுப்பெறும் முன்னர் மக்களின் தேவையை நிறைவேற்றும் ஒரு முறையாகப் பண்டமாற்றுமுறை விளங்கியது பணத்தைப் பயன்படுத்தாமல் பொருள்களின் பரிமாற்றம் வழி நேரடியாக நிகழும் வாணிப முறையே பண்டமாற்று முறையாகும். இம்முறையில் தமிழ் இலக்கியங்களில் பண்டமாற்றுமுறையை அறியலாம்.

சோழன் கரிகால் பெருவளத்தானைப் பாடிய முடத்தாமகண்ணியார் **பொருநராற்றுப்படையில்**பழந்தமிழர்களின் பண்டமாற்றுமுறை நான்கு நிலம் சார்ந்த மக்கள் பொருள்களைப் பரிமாற்றம் செய்து கொண்டனர் என்பதை,

**" தேனெய்யொடு கிழங்குமாறியோர்**
**மீனெய்யொடு நறவுமறுகவும்**
**தீங்கரும்போ டவல்குத்தோர்**
**மான்குறையொடு மதுமறுகவும்**
**குறிஞ்சி பரதவர் பாட நெய்தல்**
**நறும்பூங் கண்ணி குறவர்சூடக்**
**கானவர் மருதம் பாட வகவர்**
**நீனிற முல்லைப் பஃறிணை நுவல"**(பொருநராற்றுப்படை-214-221)

வேடர்கள், உழவர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருளுக்கு மாற்றாக தேன்-

கிழங்கு; மீன்-கள்; கரும்பு-அவல்; மான்தசை-மது பெற்றனர்என்பதை தெளிவுப்படுத்தியுள்ளார்.இதனைத் தொடர்ந்து, **பட்டினப்பாலையில்** காவிரிப்பூம்பட்டின உப்பழங்களில் படகுகள் வரிசையாகக் கட்டப்பட்டிருந்தன. அப்படகுகள் சோழநாட்டின் பல ஊர்களுக்கும் சென்று உப்பை விற்று அதற்குப் பதிலாக நெல்லை ஏற்றிவந்த செய்திகளாக,

**"வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி**
**நெல்லொடு வந்த வல் வாய்ப் பஃறி"** (பட்டினப்பாலை-29-30)

உப்பிற்கு மாற்று பண்டமாக நெல்லைபெற்று வந்த செய்தி சிந்திக்கதக்கதாகும்.

**புறநானூற்றில்** பண்டமாற்று முறைப்பற்றி கோவூர்கிழார் சான்று பகரும்போது,

**"கானுறை வாழ்க்கதை கதநாய் வேட்டுவன்**
**மான் தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்**
**தயிர்கொடு வந்த தசும்பும் நிறைய**
**ஏரின் பொழ்நர் பேரில் அரிவையர்**
**குளக்கீழ் விளைந்த களக்கோள வெண்ணெல்**
**முகந்தனர் கொடுட்ப உவந்தனர் பெயரும்**
**தென்னம் பொருப்பன் நன்னாடு"** (புறநானூறு- 33: 1-7)

வேடர்கள் வேட்டையாடிய மான் இறைச்சியை உழவர்களிம் கொடுத்து நெல்லையும், இடையர்குல பெண் தயிரைக் கொடுத்து நெல்லையும் பெற்றமை வெளிப்படையாகும்.

**நற்றிணையில்**பாலை பாடிய பெருங்கடுங்கோ உழவர் மகளிர் தெருக்களில் பூ விற்ற செய்தியாக,

**"துய்த்ததலை அதழைபைங் குருக்கதியொடு**
**பித்திகை விரவுமலர் கொள்ளிரோ என**
**வண்டு சூழ் வட்டியுள் திரிதரும்**
**தண்ட யழவர் தனிமடமகள்"** (நற்றிணை- 97: 6-9)

பூ விற்ற பெண்கள் அதற்குப் பண்டமாற்றாக நெல்லைப் பெற்றனர்.

**குறுந்தொகையில்**உறையூர் முதுகூத்தனார் பண்டமாற்று நடைபெற்றத்தைக் குறிப்பிடும்போது,

**"பாலொடு வந்து கூழொடு பெயரும்,**
**ஆடுடை இடைமகன் சென்னிச்"** (குறுந்தொகை – 221:3-4)

இடையன் மகன் நமது இல்லத்தில் பாலைக் கொடுத்து அதற்கு மாற்றாக தானியத்தை பெற்றுச் சென்றதைக் குறிப்பிடுட்டுள்ளார். இவ்விடத்தில் கூழ் என்பது அரிசி, கேழ்வரகு, வரகு, தினை முதலான தானிங்களைக் குறிக்கும்.

**ஐங்குறுநூற்றின்** முதல் பிரிவாகிய மருதத்திணையில் ஐந்தாவது பத்தில் பாணர்களிடம் காணப்பட்ட பண்டமாற்று முறையை ஓரம்போகியார்,

**"முன் எயிற்றுப் பாண்மைகள் இன்கெடிறு சொரிந்த**
**அகன் பெருவட்டி நிறைய மனையோள்**
**அரிகாற் பெரும்பயறு நிறைக்கும் ஊர**
**மாணிழை யாயம் அறியும்"** (ஐங்குறுநூறு–மருதம்–புலவிப்பத்து -47)

பாணர்கள் உள்நாட்டு நீர் நிலைகளில் அதாவது ஆறு, ஏரி, குளங்களில் வலை வீசியும் தூண்டில் போட்டும் பிடித்த மீன்களை ஊரில் கொண்டுபோய் பயற்றுக்கும் தானியத்திற்கும் மாற்றிக்கொண்டமை தெளிவு.

**அகநானூற்றில்** மாமூலனாரின் பாலைத்திணைப்பாடல் ஒன்றில் யானையின் தந்தங்களோடு கள்ளினையும் விற்று. அதனால் நெல்லினைப் பெற்றதை அறியமுடிகிறது.

**"அண்ணல் யானை வெண்கோடு கொண்டு**
**நறநொடை நெல்லின் நாள்மகிழ் அயரும்**
**கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்"**(அகநானூறு-61)

மேற்கண்ட பாடலின் மூலம் செய்தி அறியலாகின்றன.

## வணிக வரிகளின் அமைப்பில் மேலாண்மைச் சிந்தனைகள்:

பட்டினப்பாலையில உடியலூர் உருத்திரங்கண்ணனார் காவிரி ஆற்றங்கறை தெருவில் மன்னனின் பொருட்களைக் காப்பவர் சுட்டெரிக்கும் சூரியனின் தேரில் பூட்டப்பட்ட குதிரைப்போல் நாள்தோறும் சோம்பல் இல்லாமல் சுங்கவரியை வசூல் செய்தனர் என்பதை,

**"நல்லிறைவன் தொழின் மாக்கள்**
**காயய்சினத்த கதிர்ச்செல்வன்**
**தேர்பூண்ட மாஅபோல**
**வைகல்றெறு மசைவின்றி**
**உல்குசெயக் குறைபடாது"** (பட்டினப்பாலை-121 -125)

தற்காலத்தில் ஒரு அரசு இயந்திரம்செயல்படுவதற்கு வருவாய் தேவைப்படுவதை, சோழன் தமது நாட்டை நல்லாட்சி செய்தற்கு வரி விதிகப்பட்டதை பழந்தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. இதனை, இக்காலத்திலும் தொடரும் போக்கை காணமுடிகிறது. மேலும், மன்னனுக்கு உரிய வருவாய்களில் மிகவும் முக்கியமானது வரிவருவாய் ஆகும். இவ்வகையான வரிகளை **உறுபொருள், உல்குபொருள், ஒன்னார்த் தெறுபொருள்**என்று மூன்றாகவும் பிரித்தனர்.உறுபொருள் என்பது நிலவரியையும், உல்குபொருள் என்பது இறக்குமதி ஏற்றுமதிப் பொருள்களின் மீதுவிதிக்கும் வரியையும்,

ஒன்னார்த் தெறுபொருள் என்பது போர்க்களத்தில் திரட்டப்பட்ட பகைவர் பொருள்களும் தோற்ற அரசர் தந்த திறைப் பொருள்களுமாகும். இதனைப்போன்று சேரன் செங்குட்டுவன் வரிவசூல் அலுவலை மேற்கொண்டவர் **'அழும்பில்வேள்'** என்னும் வரி அதிகாரி என்ற செய்தியை தமிழ் இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகிறது.

**கலங்கரை விளக்கத்தில் மேலாண்மைச் சிந்தனைகள்:**

கடலில் கப்பல் செல்லும் போது கப்பல்களுக்கு வழிகாட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒளி உமிழ் விளக்குகள் கொண்ட உயர்ந்த கோபுரம் அமைப்பு முறை கலங்கரை விளக்கம் ஆகும். இதனை இலக்கியங்கள் வெளிச்ச வீடு என்பர். இதனை பண்டைய தமிழர் எண்ணெய் விளக்குகளால் அமைத்தனர். இந்த விளக்கின் ஒளியினர் கப்பல் துறைமுகங்களை அறிந்து கரைகளில் எந்தவிதமான இடர்பாடுகளும் இல்லாம் கரை ஒதுங்கின எனலாம். இதனை அடைப்படையாகக் கொண்டு தற்காலத்தில் மிண்ணனு முறையில் ஏற்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடதத் தக்கது.

**முடிவுரை**:

பண்டைத் தமிழர்கள் உயரிய வாழ்வியல் விழுமியங்களோடு சிறந்த வாழ்க்கை முறையைப் பின்பற்றிவர்கள் எனலாம். இதனை,எதன்வழி அறியலாம் என்பதை தமிழ் இலக்கியங்கள் வணிகர்களின் மேம்பாடுகள், அவர்களின் மேலாண்மைச் சிந்தனைகள், வகைமைநோக்கிலும் கடைத்தெருக்களின் அமைப்பிலும், பொருள் உற்பத்திமுறையிலும்,வரிவிதித்தல் முறையிலும், சிறப்பான மேலாண்மையைக் கையாண்டுள்ளனர். இதன் அடிப்படையில் பண்டமாற்றுமுறை தமிழர்களின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்தது. மேலும், அன்றாட வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்தது என்பதையும் தெளிவாகக் காட்டுகின்றன.

**துணை நின்ற நூல்கள்:**


1. தமிழண்ணல், தொல்காப்பியம் மூலமும் கருத்துக்களும், மீனாட்சி புத்தக நிலையம் மயூரா வளாகம், மதுரை, மூன்றாம் பதிப்பு, ஜனவரி-2001.
2. நாராயணசாமி, திருக்குறள், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ். சென்னை, நான்காம்பதிப்பு,1999.
3. பாலசுப்பிரமணியன்.கு.வே, சங்க இலக்கியம் (முழுவதும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி), சென்னை, நான்காம் பதிப்பு,2011.
4. மாதயன். பெ, சங்க இலக்கியத்தில் வேளாண்மையும் சமுதாயமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி), சென்னை, முதற்பதிப்பு, 2004.

**இணைய முகவரிகள்:**

1. https://shorturl.at/H3K1c
2. https://shorturl.at/af9lt
3. https://shorturl.at/0cUpT
4. https://shorturl.at/xfN26
5. https://hostwebs.site/laWuRI